# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2020
## அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## The Tamil Competition 2020
## The Australian Society of Graduate Tamils (ASoGT)

### எழுத்தறிவுப் போட்டிகளின் விதிமுறைகளும் விளக்கங்களும் (இணைப்பு: 6)

1. கீழ்ப்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி (6-7 வயது) இணையவழியாக நடைபெறும்.
2. மத்தியபிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி (8-9 வயது) இணையவழியாக நடைபெறும்.
3. மேற்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி (10-11 வயது) இணையவழியாக நடைபெறும்.
4. அதிமேற்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி (12-14 வயது) இணையவழியாக நடைபெறும்.
5. இளைஞர் பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி (15-17 வயது): இது 2 மணி 30 நிமிட நேரப் பரீட்சை ஆகும்.
6. இளைஞர் பிரிவிற்கான பரீட்சைத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டதாக அமைந்திருக்கும்.
   - வாசிப்பதற்கும் பதிலளிப்பதற்கும்(**Reading and Responding**) கேட்கப்படும் வினாக்கள்,உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வாசிப்புப் பகுதியிலிருந்து கேட்கப்படும்.
   - கேட்டபின்பு பதிலளிப்பதற்குக் (**Listening and Responding**) கேட்கப்படும் வினாக்கள், நீங்கள்கேட்ட பகுதியிலிருந்து கேட்கப்படும்.
   - எழுதுவதற்குக் **(writing)** - கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து 200 சொற்களிற்குக் குறையாமலும் 250 சொற்களுக்குக் கூடாமலும் ஒரு கட்டுரை எழுதும்படி கேட்கப்படுவீர்கள். இதிலே தலைப்பின் பொருள் விளக்கம், கட்டுரை அமைப்பு, இலக்கண சுத்தி என்பன கவனிக்கப்படும்.
7. எழுத்தறிவுப் போட்டிகள் மாநில மட்டத்தில் நடாத்தப்படுகின்றன. போட்டியாளர்களிற்கு ‘A’ நிலை, ‘B’ நிலை, ‘C’ நிலை சான்றிதழ்கள் மட்டும் வழங்கப்படும்.
8. ஒவ்வொரு பிரிவிற்கும் தரப்படும் புதிய கேள்விகளொடு கடந்த வருடப் பரீட்சைகளிற் கொடுக்கப்பட்ட சில வினாக்களும் இடம்பெறலாம்.
9. முன்னைய ஆண்டுகளில் நடந்த எழுத்தறிவுப் போட்டிகளுக்கான வினாத்தாள்கள் எமது இணையத்தளத்திலிருந்து (**www.tamilcompetition.org**) பெறலாம்.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு,**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**